ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–5.

முன்னிலை: திரு.த.ஆனந்த், இ.ஆ.ப.,

ந.க.எண். இ6/9006/2023 நாள். 12.06.2023.

பொருள்: பணியாளர் தொகுதி–ஆதிதிராவிடர் நலம் – திருவள்ளூர் மாவட்டம் – செவ்வாப்பேட்டை – அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் – திரு. க.கனிஅமுதன் என்பவரது பணிவரன் முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:

1. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.ஜே3/10126/2022 நாள்.03.11.2022
2. அரசாணை நிலை எண்.33 பணியாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை நாள்.08.03.2023.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

******

ஆணை:–

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், வெள்ளவேடு, மேல்மணம்பேடு கிராமத்தை சார்ந்த திரு.கருணாகரன் என்பவர் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு 02.02.2021 அன்று காலமானதால் வன்கொடுமை தடுப்பு சட்டம் திருத்த விதிகள் 2016–ன் கீழ் தனியரது மகன் திரு.க.கனிஅமுதன் என்பவருக்கு பார்வை 1ல் காணும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூலம் ஆதிதிராவிடர் நல துறையில் பணிநியமனம் வழங்கப்பட்டு திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம் செவ்வாப்பேட்டை அரசு ஆதிந ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 05.11.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், பார்வை 2–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக எந்த வித விதி தளர்வும் தேவையில்லை எனில் பணி நியமன அதிகாரியே சம்மந்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் வன்கொடுமை தடுப்பு சட்டம் 2016–ன் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையில் பணிநியமனம் வழங்கப்பட்டு திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம் செவ்வாப்பேட்டை அரசு ஆதிந ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 05.11.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு.க.கனிஅமுதன் என்பவர் அப்பணிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 05.11.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திரு.க.கனிஅமுதன் இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின் படி தகுதியுடையவராகிறார்.

ஒம்./–த.ஆனந்த்
ஆதிதிராவிடர் நல இயக்குநர்.

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக. 2/3

இணைப்பு: –
10th marksheet
12th mark sheet
Degree Certificate
Transfer Certificate

பெறுநர்.

✓திரு.க.கனிஅமுதன்,
இளநிலை உதவியாளர்,
அரசு ஆதிந நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
செவ்வாப்பேட்டை,
திருவள்ளூர் மாவட்டம்.

நகல்.

1. அரசு செயலாளர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
   தலைமைச்செயலகம், சென்னை – 9.
2. தலைமை ஆசிரியர்,
   அரசு ஆதிந நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
   செவ்வாப்பேட்டை,
   திருவள்ளூர் மாவட்டம்.
3. "இ5" இருக்கை.
4. முக்கிய ஆணைத் தொகுப்பு.